**OS.No.20/2020 D.W.1-பத்மநாபன் 13.03.2026**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வாதிக்கும், எனக்கும் இடையில் உள்ள வாடகை ஒப்பந்தம் பி.சா.ஆ.4 நீதிமன்ற கட்டணம் இல்லாத முத்திரை தாளில் எழுதப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.4-ல் ரெவன்யூ ஸ்டாம்பு தான் பின்னிட்டு ஒட்டப்பட்டுள்ளது. ரெவன்யூ ஸ்டாம்பில் கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை. ரெவன்யூ ஸ்டாம்பில் கையொப்பம் இல்லாததால் எப்பொழுது வேண்டுமானாலும் ஒட்டியிருக்கலாம் என்றால் இல்லை, ஒட்டியபிறகு தான் கையொப்பம் போட்டார். பி.சா.ஆ.4-ல் வாடகைதாரர் என்ற இடத்தில் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.4-ல் உரிமையாளர் என்ற இடத்திற்கு கீழ் என் கையொப்பம் உள்ளது, அதற்கு கீழாக மீனாட்சி சுந்தரம் என்ற கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.4-ல் யார், யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்றால் என்னுடைய நண்பர் துரைமுருகன் என்பவர் 2வது சாட்சியாக கையொப்பம் போட்டார். RLTOP.3/2022-ல் எனது நண்பர் துரைமுருகன் அளித்த சாட்சியத்தின்படி அவர் 3 முறை தான் வாதியை சந்தித்ததாக குறிப்பிட்டுள்ளார், அதில் முதல் முறை வாதியை அவரது வீட்டில் வைத்து தான் பார்த்துள்ளேன், 2வது முறை பதிவின் போது அடையாறிலும், 3வது முறை மறைமலைநகர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வந்தபோதும் பார்த்ததாக குறிப்பிட்டுள்ள விவரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் 10.03.2016 தேதியிட்ட வாடகை ஒப்பந்த பத்திரம் பொய்யாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. இந்த ஆவணத்தில் மீனாட்சி சுந்தரத்தின் கையொப்பத்தை பச்சை தாளில் பெற்று அந்த ஒரு பேப்பரில் எல்லா விவரங்களும் வருமாறு நெறுக்கி அடித்து வழக்கத்திற்கு மாறான எழுத்து உருவில் (Font size) தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பி.சா.ஆ.4 ஆவணம் RLTOP.3/2022 தாக்கல் செய்வதற்காகவே தயாரிக்கப்பட்ட போலி ஆவணம் என்றால் சரியல்ல. RLTOP.3/2022 தாக்கல் செய்வதற்கு முன்பு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன். அதனை எப்பொழுது கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. RLTOP.3/2022 வழக்கு அசல் வழக்கு எண்.20/2020-க்கு 2 வருடங்களுக்கு பின்னிட்டு தான்

தாக்கல் செய்யப்பட்டது என்றால் கோவிட் பரவலை முன்னிட்டு நீதிமன்றங்கள் இயங்காததால் அதனை அனுசரித்து அவ்வாறு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் நான் வழக்கறிஞர் மூலம் எப்பொழுது ஆஜரானேன் என்றால் சரியாக தெரியவில்லை. நான் வழக்கறிஞரை வைத்து இந்த நீதிமன்றத்தில் 13.03.2020 அன்று ஆஜரானேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தும் எனக்கு மார்ச் மாதம் 2020லேயே தெரிந்து விட்டது என்றால் சரிதான். 2019 ஜனவரி முதல் வாதி வாடகை கொடுக்கவில்லை என்று எந்தவொரு அறிவிப்பும் 2022 வரை கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் மறைமலைநகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த CSR பி.சா.ஆ.11-ல் மீனாட்சி சுந்தரம் என்பவரிடமிருந்து அவருக்கு சொந்தமான பராசக்தி நகரிலுள்ள மனை எண்.7-யை இடத்தையும், வீட்டையும் கடந்த 29.03.2016ம் தேதி கிரயம் செய்ததாகவும், இதுவரை வீட்டை காலி செய்யாமல் வீட்டை ஆக்கிரமிப்பு செய்யாமல் இருப்பதாக கண்டுள்ளது என்றால் சரிதான், வாடகைதாரராக இருந்து வீட்டை ஆக்கிரமித்து வருகிறார் என்றும் நான் புகாரில் சொன்னேன், போலீசார் அதை சுருக்கிவிட்டார்கள். அவ்வாறு நான் குறிப்பிடும் புகாரை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எங்களுக்குள் நிலக்கிழார், வாடகைதாரா் என்ற உறவுமுறை கிடையாது என்றும், எனவே நான் RLTOP.3/2022 தாக்கல் செய்ததே தவறு என்றும் சொன்னால் சரியல்ல. நான் உண்மையில் கிரயம் பெற்றிருந்தால் சுவாதீனம் கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டுமே தவிர RLTOP.3/2022 தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும் சொன்னால் சரியல்ல. முதல் பிரதிவாதி தான் 2 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முதல் பிரதிவாதி முதலில் வாதியின் நண்பராக இருந்து, பிறகு என்னுடன் சேர்ந்து கொண்டு இந்த சொத்தை அபகரிக்க வேண்டி அடமான பத்திரம் எழுதுவது போல் வாதியை இருவரும் கூட்டி சென்று கிரய பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டீர்கள் என்றும் சொன்னால் சரியல்ல, ஜானகிராமன் என்பவர் யார் என்று எனக்கு தெரியாது, அவர் கையொப்பம் போட்ட விவரமும் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் அந்த தேதியில் போடவில்லை என்றும், அதனால் தான் யார், யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள்

என்ற விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்திற்கு பட்டா மாற்றியது 6வது மாதம் 2018ல் என்றால் சரிதான். மின்சார இணைப்பை என் பெயரில் 2019ல் மாற்றிக் கொண்டேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மின் இணைப்பை பெற்ற பின்னர் தான் காவல் துறையில் புகார் கொடுத்தேனா என்றால் என்னை கொலை மிரட்டல் விடுத்தார், அதனால் கொடுத்தேன். நான் உண்மையில் கிரயம் பெற்றிருந்தால் 2016லேயே பட்டா, வீட்டு வரி ரசீது, மின் இணைப்பு ஆகியவற்றை மாற்றியிருப்பேன் என்றும், அவ்வாறு கிரயம் பெறவில்லை என்பதால் தான் அதனை மாற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.2 முத்திரை தாள் இல்லாத பத்திரத்தில் முதலில் இருக்கும் மீனாட்சி சுந்தரத்தின் கையொப்பம் வேறு, அடுத்து இருக்கும் மீனாட்சி சுந்தரத்தின் கையொப்பம் வேறு என்றும், அந்த ஆவணத்தை நானே கையொப்பம் இட்டுள்ளேன் என்றும், அதனால் மேற்படி ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி கையொப்பம் மீனாட்சி சுந்தரத்தின் கையொப்பமே இல்லை என்றும், மேற்படி ஆவணத்தை கையெழுத்து நிபுணரிடம் ஆய்விற்கு அனுப்பினால் உண்மை தெரியவரும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் அபகரிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் நானும், முதல் பிரதிவாதியும் சேர்ந்து அடமான பத்திரம் எழுதுவதுபோல் வாதியை அழைத்து வந்து கிரய பத்திரம் எழுதிக்கொண்டோம் என்றும், அந்த கிரய பத்திரத்தை வைத்து நான் எந்தவொரு உரிமையும் கோரமுடியாது என்றும் சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.2 மற்றும் பி.சா.ஆ.4 இந்த வழக்கிற்காக புனையப்பட்டது என்றால் சரியல்ல. வாதி கோரியவாறு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. எனது எதிர்வாதம் நிராகரிக்க தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை